Registered as a Newspaper

தங்கம் தேயிலை
50 GRMS NET
TANGAMM TEA
SPECIALLY PACKED FOR THE MEDICAL HALL
COLOMBO

உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்
KEELS for MEALS
போன்: 22575
ஏகவிநியோகஸ்தர்: மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி மீ 21 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 23 ( 06 09 – 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 176

★ சட்டம் ★ தொழிலாளர் கல்வி ★ சைவ சித்தாந்தம்

# யாழ். பல்கலைக் கழகத்தில்

# புதிய துறைகளை ஆரம்பிக்க முயற்சி

## மக்களும் வற்புறுத்தினாலே காரியம் கைகூட முடியும் என்கிறார் புதிய உபவேந்தர் துரைராசா

—அலுவலகப் பிரதிநிதி பெஞ்சமின் ராஜரத்தினம்—

யாழ்ப்பாணம், செப்டம்பர் 6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், சட்டம், தொழிலாளர் கல்வி, சைவசித்தாந்தம் ஆகிய மூன்று புதிய துறைகளை ஆரம்பிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கேட்கவுள்ளோம்.

எமது முயற்சி பயனளிப்பதற்கு மக்களுடைய பங்கும் அவசியம். சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் இவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் கோரிக்கைகளை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கும், உயர்கல்வி அமைச்சரான ஜனாதிபதிக்கும் அனுப்பவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராகக் கடந்த வாரம் பதவி ஏற்ற பேராசிரியர் அ. துரைராசா, உதயனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பழகுவதற்கு இனியவராகவும், நிர்வாக விடயங்களை நன்குபுரிந்தவராகவும் தன்னடக்கத்துடன் காணப்படும் புதிய உபவேந்தர்-

தமிழ்ப் பகுதியில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தை, சகல வசதிகளும் உடைய பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும் என்பதிலும்-

பல்கலைக்கழகம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன என்றும், அதே போல பல்கலைக்கழகத்துக்கு அளிக்க வேண்டிய உதவிகள் பல உண்டு என்றும்- தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா உதயனுக்கு அளித்த பேட்டியின் போது வெளியிட்ட முக்கிய கருத்துக்கள், தகவல்கள் வருமாறு:-

பல்கலைக்கழகங்கள் சமுதாயத்துக்குத் தேவையானவற்றைத் தான் செய்யவேண்டும். யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்குப் பரந்த அளவில் பயன் தரக்கூடிய துறைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா, முல்லைத்தீவில்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு ரி.ஆர்.ஆர்.ஓ. உதவி

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (ரி.ஆர்.ஆர்.ஓ) முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டவர்களுக்குலைட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா மற்றும் உணவுவகைகளை விநியோகிக்க உள்ளது.

இந்தவிநியோகம் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அனுசரணையுடனேயே வழங்கப்பட உள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அகதிகளுக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு உள்ளது.

இவற்றில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியானபால் மா நேற்று லொறிகள் மூலம் அனுப்பிவைக்கப் பட்டன.

மிகுதி 75 ஆயிரம்ரூபா பெறுமதியான உணவு வகை பின்னர் அனுப்பி வைக்கப்படும்

இதேவேளையில் வவுனியா மாவட்ட நெடுங்கேணிப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் ரெலோ அலுவலகம் மீது தாக்குதல்

### 2பேர் மரணம்;2பேர் படுகாயம்

வவுனியா, செப்.6

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் உள்ள ரெலோ இயக்கத்தின் அலுவலகம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர், 2 பேர் படுகாயமடைத்தனர்.

ரெலோ இயக்கப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

காயமடைந்த இருவரையும் இந்தியப் படையினர் ஹெலி மூலமாக வவுனியாவுக்கு கொண்டு வந்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கும் வேளையிலேயே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.

(ஒ-164)

கையிருப்புப் போதாது

## இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு!

### இரத்தவங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அண்மைக் காலத்தில் இரத்தத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

தற்பொழுது இங்கு கையிருப்பில உள்ள இரத்தம் அசம்பாவிதங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஒருநாளுக்கு — மேல் பயன் படுத்தப் போதுமானதாக இல்லை.

இந்தத் தகவலை யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்காலத்தில் அசம்பாவிதங்கள் நிறைந்த சூழ்நிலையில் நாம் பெருமளவு இரத்தத்தை வங்கியில் கையிருப்பில் வைத்திருக்கவேண்டும் முன்பு அசம்பாவிதங்களை முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழர் விவகாரம் :

## உடனடிப் போர் நிறுத்தமும் நியாயமான பேச்சுவார்த்தையும் கோரி இந்திய ஜனாதிபதியிடம் நேரில் மகஜர்

சென்னை, செப். 6

ஈழத்தில் உடனடியாக போர் நிறுத்தம் செய்து, நியாயமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தக் கோரி ஜனாதிபதி திரு. வெங்கடராமனிடம் நேரில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது

இந்த மகஜரில் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் உட்பட 500 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

மகஜரை தி. மு. க. தலைவர் கருணாநிதியின் ஆலோசனைப்படி திரு. வை. கோபால்சாமி எம் பி ஜனாதிபதி வெங்கடராமனை நேரில் சந்தித்துக் கையளித்தார்.

கையெழுத்து இயக்கம் ஈழத்தமிழர் உரிமை பாதுகாப்புச் சட்டமைப்பின் சார்பில் உலகம் முழுவதும் நடந்தது. ஈழத்தமிழர் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவது குறித்தும் மகஜரில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பி.டி. ஜாட்டி, முன்னாள் உயர் நீதிமன்றநீதிபதி வி.ஆர். கிருஷ்ணஐயர் உட்பட 500க்கும் மேற்பட்ட அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் கையெழுத்திட்டனர்.

ஜேர்மனி செஞ்சிலுவைச் சங்கம், ஐரோப்பிய மனித உரிமை அமைப்புக்கள், வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் கையெழுத்திட்டனர்.

மகஜரின் பிரதி பிரதமர் ராஜீவ் காந்தி அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(ஒ-எ)

## தேர்தலை நடத்த முயற்சிக்க வேண்டாம்

### ஜே. ஆரிடம் கூட்டணியினர் கேட்பர்

கொழும்பு, செப்.6

இப்போதையசூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த முயற்சிக்க வேண்டாம் என்று தமிழர்விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம்கோருவர் எனத் தெரியவருகிறது.

இதற்காக செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், உபதலைவர் திரு. ஆர். சம்பந்தனும்கொழும்பு வந்துள்ளனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணிமேலிடம் (பொலிட் பீரோ) எடுத்த முடிவை அடுத்தே அவர்கள் இங்கே வந்துள்ளனர்.

இதனிடையில்இந்திய தூதர் திரு. ஜே என். டிக்ஸிற்றிடமும் தேர்தல் குறித்து அவர்கள் பேசுவர் எனத் தெரிய வருகிறது.

(ஒ-எ)

### மெய்ப்பாதுகாவலர் உட்பட மூவர் சுட்டுக் கொலை

கொழும்பு செப். 6

மேற்கு மாகாணசபை அமைச்சர் அல்மன் பீரிஸின் மெய்ப்பாது காவலர் உட்பட மூன்றுபேர் இனந் தெரியாத நபர்களினால் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மிரிஹான பொலீஸ் பகுதியில் அம்புல்தெனியா என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

(ஒ-எ)

### சுபநேரம்

06 – 09 – 88
ஆவணி – 21
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.34முதல் 12.04வரை
ராகுகாலம்:
03.04முதல் 04.34வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

### ஆலோசனையில் மட்டுமே

யாழ்ப்பாணம், செப் 6

இம்மாதம் 4ஆம் திகதி வெளியானஉதயன்முதற் பக்கத்தில் "யுத்த நிறுத்தம் செய்வதற்கு அனுமதி கிடைத்து விட்டதாம்" என்ற தலைப்பில் பிரசுரமான செய்தி குறித்துப் பலாலியில் உள்ள அமைதிப் படைத் தலைமை அலுவலகத்தில் இருந்து மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது —

அந்த மறுப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

செய்தியில் தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. யுத்தநிறுத்தம் குறித்து அமைதிப் படை அதிகாரிகளிடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இரத்ததானம் செய்தால் உடம்பு பழுதாய்ப் போய்விடும் எண்டு எங்கடை சனம் நினைக்கும் வரைக்கும் வங்கி வரளத்தான் செய்யும் பாருங்கோ...!

### மாகாண சபை உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, செப் 6

தென் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை இனந் தெரியாத நபர் ஒருவரினால் மாத்தறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐ. தே. கட்சி உறுப்பினரான அவரின் பெயர் அஜந்தா அமரசிங்கா. இவர் பிரபல விளையாட்டு வீரர் ஆவார். (ஒ-எ)

## காங்கேசன் ஊழியர் மூவரும் நேற்று விடுவிப்பு

### ஒத்துழையாமை இயக்கம் முடிந்தது

யாழ்ப்பாணம் செப் 6

காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலை ஊழியர்கள் மூவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 29ஆம் திகதி அமைதிப் படையினரின் சுற்றி வளைப்பின் போது காங்கேசன்துறை தொழிற்சாலைப் பகுதிக்குள் வைத்து நான்கு ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் ஏற்கனவே விடுவிக்கப் பட்டு விட்டார். மிகுதி மூவருமே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தினரும் அனைத்து ஊழியர்களும் ஒத்துழையாமை இயக்கத்தை கடந்த 31 ஆம் திகதி முதல் 6 நாட்கள் நடத்தினர் என்பதும்-

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தபன தொழிற் சங்கமும் இந்த ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவாக இம்மாதம் இரண்டாம் திகதி இரண்டு மணித்தியாலங்கள் கருவிகளைக் கீழேவைத்துப் போராட்டம்நடத்தினர் என்பதும் தெரிந்ததே.

(ஒ)

### சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, செப் 6

கொழும்பு சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றங்களைப்பகிஷ்கரித்தனர். சக சட்டத்தரணி விஜேதாஸ வியனராச்சி பொலீஸ் காவலில் இருந்த சமயம் மரணமானதை ஆட்சேபித்து இப் பகிஷ்கரிப்பு இடம் பெற்றது.

சட்டத்தரணி வியானராச்சிக்கு தாக்குதல் காயங்கள் காரணமாக மரணம் சம்பவித்ததாக பிரேதபரிசோதனையில் தெரியவந்தது.

(ஒ-எ)

## வட்டக்கச்சியில் நேற்று துப்பாக்கிச் சமர்

கிளிநொச்சியைச் சேர்ந்த வட்டக்கச்சி, சில்வா வீதியில் நேற்று அமைதிப் படையினருக்கும், போராளிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

நேற்றுக்காலை நடந்த இந்தச் சண்டையின் போது இந்திய அமைதிப் படை தரப்பில் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் எண்ணிக்கை குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் தெரிய வரவில்லை. எனினும் படையில் மூவர் மரணமானார்கள் என்றும் சிலர் காயமுற்றனர் என்றும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் கிடைத்தன.

சண்டையின் போது போராளிகள் தரப்பில் ஏற்பட்ட சேதம் குறித்தும் எதுவும் தெரியவரவில்லை.

நேற்று நடந்த மேற்படி சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பல மணி நேரமாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டபடிஇருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சண்டையை அடுத்து அப் பகுதியில் அமைதிப் படையினர் பொதுமக்களைத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

படையினரின் இத்தாக்குதலின் போது வெளிக்காயம், உட்காயமடைந்த நால்வர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

கே. ஜெயகரன் (15) வட்டக்கச்சி. பி. ஜெகதீஸ்வரன் (16) வட்டக்கச்சி, ஆர். ஏகாம்பரம் (25) இராமநாதபுரம், மெனிக்லன் (36) யாழ்ப்பாணம். (ஒ-10)

### எம்.பி. வீட்டின் மீது தாக்குதல்

அம்பலாங்கொடப் பொலீஸ் பகுதியில் கரந்தெனியா எம்.பி திருமதி சேபாலி சேனாதீராவின் வீட்டின் மீது நேற்று அதிகாலைஇனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலை பொலீஸார் முறியடித்தனர் என்று அறிவிக்கப் பட்டது. (ஒ-எ)

## போராளிகளின் தியாகங்கள் என்றும் அணைந்து விடுவதில்லை

### நினைவுத்தூபி அடிக்கல் நாட்டு விழாவில் உரை

வடமராட்சி செப் 6

சுதந்திரத்துக்காகப் போராடும் போராளிகளின் தியாகங்கள் என்றும் அணைவதில்லை சரித்திரம் உள்ளவரை, மக்கள் வாழும் வரை அது நிலைத்து நிற்கும்.

இவ்வாறு வல்வை பிரசைகள் குழுத்தலைவர் திரு எஸ். செலவேந்திரா நேற்று வல்வை திருவிலில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 5 ஆம் திகதி பலாலி ஸ்ரீ லங்கா இராணுவ முகாமில் சயனற் உட்கொண்டு உயிர் நீத்த 12 போராளிகளின் நினைவுத் தூபிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், குறிப்பிட்டதாவது:

போராளிகளின் தியாகங்கள் என்றும் வீண் போவதில்லை. அதற்காக அவர்கள் தங்களின் உயிர் இழப்புக்களை பெரும் போராட்டமாக மதிப்பதும் இல்லை அத்தகைய தியாக வீரர்களின் நினைவுகள் என்றும் மக்கள் மனதில் இருந்து அகலப் போவதில்லை.

அந்த வகையிலேயே சுமார் இரண்டு லட்சம் பெறுமதியுடைய 50 அடி உயரமான இந்த நினைவுத்தூபி கட்டப்படுகிறது- என்று அவர் கூறினார்.

நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி கட்டில் மெத்தை Vono Spring கட்டில், கண்ணாடி மேசைகள், கடைச் சோக்சேஸ், சாப்பாட்டு மேசைகள், Show Case, காரியாலய மேசைகள், மற்றும் பித்தளை கிளாஸ் வகைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (6103)

Honda Re-Condition மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. C 90, Hao 2, C 50, CF 50 Charly, ST 50, MB 5 என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Cycle Centre, 148, (230) K. K. S. Road, Jaffna. TP 23807. (6222)

41ஸ்ரீ இசுசு லொறிக்குரிய கியர்பொக்ஸ் எஞ்சின் மெயின் அச்சில், செல் முதலியன விற்பனைக்கு உண்டு. முகவரி இல; 7 சீ. பீச் லேன், கொழும்பு - 11, (புறக்-கோட்டை மத்திய சந்தைக்கு அருகில்) (6249)

மோட்டார் சையிக்கிள் Honda, Econopower 90, விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 12, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6145)

புதிய Honda Reconditioned, புதிய, பழைய Model C 90, C 50, CD 90, CD 50, MD 90, Charly மோட்டார்சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு No. 16, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (A. G. A அலுவலகம் முன்பாக) (6146)

## தேவை

சண்டிலிப்பாயில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை, தெரிந்த பெண்பிள்ளைகளும், பூ வேலையில் அனுபவமுள்ள பெண்களும் உடன் தேவை, தொடர்பு சு. வெங்கடேஸன், C/o கு. விநோதன் 'அகில் காமன்ஸ்' உத்தமிஇல்லம், கல்வளை சண்டிலிப்பாய், (6247)

## மணமகன் தேவை

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து மதத்தைச்சார்ந்த வேளாளகுலத்தைச் சேர்ந்த படித்தபெண்வயது27உயரம் 5 அடி 5 அங்குலம் பூச நட்சத்திரம் உடையவருக்கு சகோதரன் வரன் தேடுகிறார். அரசாங்கத் துறையில் வங்கிகளில் கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுபவர் விரும்பத்தக்கது. போதிய சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: 188, C/o உதயன், யாழ்ப்பாணம். (6133)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### DIPLOMA IN NURSING

தாதியர் பயிற்சி இரண்டாம் பிரிவு: தாதியர் பயிற்சி நெறி செப்டம்பர் 12 ஆம் திகதி ஆரம்பம். தகுதி வாய்ந்த டாக்டர்களினால் நடாத்தப் படுகிறது. விபரங்கட்கு; ஜேயல் ரியூட்டறி மானிப்பாய், நவீன வைத்தியசாலை 1ஆம் கட்டையடி, உடுவில் (6139)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி புதியவகுப்பு 10- 9- 1988 சனி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. நேரில் வந்து கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். க. பொ. த (சா / த) குறைந்த தகைமையாகும் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6353)

### தொழில் வாய்ப்பு

பாடசாலைச் சிறு பிள்ளைகளின் சேட் வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் உள்ளவர்கள் உடன் வேலைக்குத் தேவை. நேரில் வரவும். வசந்தா பேபி காமன்ஸ். ஆடியபாதம் றோட். (திருநெல்வேலி சந்திக்கும் மெடிக்கல் கல்லூரிக்கும் இடையில்) திருநெல்வேலி. (6354)

## சேவை

81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி 'மாங்கல்யா' திருமண சேவை பிரதம ஸ்தாபகரும், பங்காளியுமான நான் எனது இல்லத்தை ஆனைப்பந்தியில் இருந்து 14 விதானையார் ஒழுங்கை கொழும்புத்துறை மேற்கிற்கு மாற்றியுள்ளேன். என்னுடன் நேரடியான தொடர்பு உடையவர்கள் புதிய விலாசத்திலும் தொடர்பு கொள்ளலாம்- திரு விளங்சம். (6352)

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கு (Lamination) பிளாஸ்ரிக் கவரிங்களுக்கு நாடுங்கள்: கனன் போட்டோ கொப்பிங் சேவிஸ், மணல் ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறை. (6245)

### தவறிவிட்டது

செல்லையா நவரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 483632797 V 04 - 09 - 88 அன்று நல்லூர் கோயிலில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது நல்லூர் கோயிலில் ஒப்படைக்கவும். அத்துடன் மோட்டார் சைக்கிள் பாஸ் உள்ளது (6147)

357041341 V இலக்கமுடைய திருமதிவிலாவதி ஆலாலசுந்தரம் என்பவரின்தேசிய அடையாள அட்டை 01 - 09 - 88 பெரிய கடையில் மஞ்சள் நிற பர்சோடு தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (6355)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும் தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/109)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் தொடர்பு Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C108)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும் தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (6143)


# மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்திய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப் 6

யாழ்ப்பாண மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாஜம் உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரபந்தாட்டம், தாச்சி ஆகிய போட்டிகளை நடத்தியது:-

26 - 08 - 1988 நடைபெற்று முடிந்த 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி முடிவுகள்:-

சென்மேரிஸ் சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்.

1. நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் 4.0 கோல் கணக்கில் பாஷையூர் அந்தோனியார் சனசமூக நிலையத்தை தோற்கடித்தது.

2. நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய ஏ அணி 2.0 கோல்களால்கொக்குவில் பொற்பதிசனசமூக நிலைய அணியைத் தோற்கடித்தது.

3. கொழும்புத்துறை மேற்கு சன சமூகநிலையம் 3.0 கோல்களால் குருநகர் றெக்கிஷேமேசன் சனசமூக நிலைய "B" அணியைத் தோற்கடித்தது

4. குருநகர் சனசமூக நிலைய "சி" அணி 5.01 கோல்களால் நாவாந்துறை கலைவாணி சனசமூகநிலையத்தை தோற்கடித்தது.

5. குருநகர் றெக்கிளமேஷன் சனசமூகநிலையம் 3.2 கோல்களால் அரியாலை சனசமூக நிலையத்தை தோற்கடித்தது.

6. குருநகர் சனசமூக நிலையம் 1 0 என்றகோல்களால் நாவாந்துறை சென் மேரிஸ் சன சமூக நிலையத்தை தோற்கடித்தது

27-08-1988இல் நடைபெற்ற 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள்:

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானம்

1. பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சன சமூக நிலையம் 1.0 கோல்களால் குருநகர் சன சமூகநிலையத்தை தோற்கடித்தது.

2. கிறீன்பீல்ட்சனசமூக நிலையம் 2 0 கோல்களால் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தை தோற்கடித்தது

3. குருநகர் சனசமூக நிலையம் "பி" 1 0 கோல்களால் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை தோற்கடித்தது.

4. சென் நீக்கிலஸ் சனசமூக நிலையமும் அரியாலை சனசமூக நிலையமும் எதுவித கோல்களும் போடாதபடியால் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் 5 3 பெனல்டி மூலம் வெற்றியீட்டியுள்ளது.

5. பாஷையூர்மக்கள் முன்னேற்றச் சங்க சன சமூக நிலையம் 5. 0 கோல்களால் கொழும்புத்துறை மேற்கு சன சமூகநிலையத்தை தோற்கடித்தது.

6. குருநகர் சனசமூக நிலையம் 2 0 கோல்களால் பாஷையூர் மக்கள் முன்னேற்ற சன சமூக நிலையத்தைத் தோற்கடித்தது.

கால் இறுதியாட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள்

1. குருநகர் றெக்கிளமேஷன்சனசமூகநிலையம்.
2. கொய்யாத்தோட்டம் சனசமூகநிலையம்.
3. குருநகர் சனசமூக நிலையம் "டி"
4. நாவாந்துறைசென் நீக்கிலஸ்சனசமூக நிலையம் "பி"
5. கிறீன் பீல்ட் சன சமூகநிலையம்
6. கிறீன் பீல்ட் சன சமூக நிலையம்.
7. குருநகர் சனசமூக நிலையம் "ஏ"
8. பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சன சமூக நிலையம்

(தொடரும்)

# இரண்டு வாரங்களாக வேலைக்குச் செல்லவில்லை

பருத்தித்துறை, செப் 6

முல்லைத்தீவுப் பகுதியில் நெடுங்கேணி ஒட்டுசுட்டான், முள்ளியவளை, முத்தையன்கட்டுப்பகுதிகளில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பலர் கடந்த இரண்டு வாரங்களாக கடமைக்குச் செல்லமுடியாமல் உள்ளனர்.

இவர்களில் பலர் கடமைக்கென வடமராட்சிப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்று மாங்குளம் சந்தி, புதுக்குடியிருப்புச் சந்தி, புளியங்குளம் சந்தி ஆகிய பிரதான வாயில் அருகே இந்திய அமைதிப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர்திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவதால் வீண் பண விரயம் ஏற்படுவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். (ஓ-118)

# கோமாரி தடுப்பு ஊசி

மானிப்பாய், செப் 6

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையினர் கோமாரி நோய் தடுப்பூசி போடும் நடவடிக்கையை இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் செயற்படுத்தவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 6-30மணி முதல் 7-30 மணி வரை உடுவில் நாச்சிமார் கோவிலிலும், காலை 7-30 மணி முதல் 8 30 மணி வரை உடுவில் கற்பொக்கணை கலைமதி சன சமூக நிலையத்திலும் வைத்து கோமாரி தடுப்பூசி போடப்படும் என சுன்னாகம் கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் திரு பா. சுதர்சன் தெரிவித்துள்ளார்.

கால்நடை வைத்தியர் டாக்டர் ரி. வர்ணலிங்கம் தலைமையில் போடப்படும் இத்தடுப்பூசியை ஒரு மாதத்துக்கு மேற்பட்ட கன்றுகளுக்கும். ஏனைய காளை, பசுமாடுகளுக்கும் தவறாது போட்டுக்கொள்ளுமாறு திரு. பா. சுதர்சன் கால்நடை வளர்ப்போரைக் கேட்டுள்ளார், (இ-90)

## பன்னவேலைப் பயிற்சி வகுப்பு

தவசிகுளம் கொடிகாமம் கிராம அபிவிருத்திச் சங்க அநுசரணையுடன் யாழ்-பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் பன்னவேலை ஆசிரியரால் பன்னவேலைப் பயிற்சி வகுப்பொன்று இம்மாத இறுதிப்பாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஓ-75)

## தேடுதல் மந்தம்

ஒட்டிசுட்டான், செப் 6

பெரும் எண்ணிக்கையான படையினர் நித்திகைக்குளம் பகுதிக்குச் சென்றுவிட்டதால்ஒட்டிசுட்டான் மற்றும் சில பகுதிகளில் தேடுதல், சுற்றிவளைத்தல் கடந்த சில நாட்களாக இடம் பெறவில்லை.

முகாம்களுக்குச் சென்றுதினசரிகையொப்பம் இடுபவர்களையும் சில தினங்களுக்கு வரவேண்டாமென்று தெரிவிக்கப்பட்டதாக முகாம்களிலிருந்து விடுதலையானவர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-113)

## பஹாய்உதவும்

நெடுந்தீவு, செப் 6

நெடுந்தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய திட்டங்கள் குறித்து நெடுந்தீவு பஹாய் இயக்கம் பரிசீலனை செய்யும்.

பஹாய் இயக்கத்தின் நெடுந்தீவுத்தலைவர் திரு. கா. குலேந்திரன் தலைமையில் இடம் பெற்ற மாநாட்டில் இத்தகைய முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன. (இ-111)


உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவ வருஷம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (07-09 1988) புதன்கிழமை காலை 7மணி முதல் 8.30 மணி வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில்

திருமதி சி. சின்னையா அவர்களின் புதல்வன் திருநிறைசெல்வன்
**குமார் (B. Com)**
(யுனிக்கோன் மெடலிக்ஸ் கம்பனி கொழும்பு)
அவர்களுக்கும்

திரு. திருமதி. வை. கோபாலகிருஷ்ணு (மின் அத்தியட்சகர், கோப்பாய்) அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருநிறைசெல்வி
**சாந்தினி**
அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு மணமகளில்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி.
சி. சின்னையா
"மணவாலயம்"
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

திரு. திருமதி
வை. கோபாலகிருஷ்ணு
(மின் அத்தியட்சகர், கோப்பாய்)
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(6140)

## CHANGE OF ADDRESS

**K. A. ENGINEERS**

Civil, Mechanical & Electrical Engineers & Contractors

Our Main Office Shifted to:
**142, Palaly Road,**
**Thirunelvely, Jaffna.**
(6320)

## பிரயாண ஒழுங்குகள்

குவைற் நாட்டிற்கு

கூலியாட்கள், பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை. முற்பணம் அறவிடப்படமாட்டாது பாஸ்போட்டும் செய்து கொடுக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: வி. க. கனகேந்திரன், றெயில் றோட் (நந்தாவில் அம்மன் கோவிலடி) கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(6319)

## முதலாவது ஆண்டுத் திவசம்

அமரர் V. S. பத்மநாதன்

அமரரான திரு. V. S. பத்மநாதன் அவர்களின் முதலாவது ஆண்டுத் திவசம் இன்று 6-9-88ல் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் கண்டி வீதியிலுள்ள "சந்திரகிரி" இல்லத்தில் நடைபெறும்.

பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(6148)

## 'M' THREE TRAVELS

பெருமையுடன் வழங்கும் உடனடி வேலைவாய்ப்புக்கள்

### சவூதி அரேபியா

சவூதி அரேபியாவுக்கு கடவுச்சீட்டுத் தந்தவர்களில் அனேகரின பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் பயணம் செய்து விட்டனர். கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு கடவுச்சீட்டுத் தருபவர்களின் பயண ஒழுங்குகள் விரைவில் செய்து கொடுக்கப்படும்.

(1) கனரக வாகன சாரதிகள்
(2) காப்பென்ரர் (தச்சு வேலையாட்கள்)
(3) மேசன்
(4) துறைமுக சுத்திகரிப்பாளர் (கிளீனேர்ஸ்)
(5) கேற்றறிங் கிளீனேர்ஸ் (சமையல் அறைக்கிளீனேர்ஸ்)

### ஜெமன்

சவூதி அரேபியாவிற்கு அண்மித்த புதிய நாடான ஜெமன் நாட்டுக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு. அதி விரைவில் பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

1. காப்பென்ரர் (தச்சு வேலையாட்கள்)
2. மேசன்
3. ரீல் (F) விற்றர்ஸ் (கம்பி கட்டுபவர்கள்)
4. (B) பாபென்ரர்ஸ் (கம்பி வளைப்பவர்கள்)
5. பிளம்பர்ஸ் (குழாய் வேலை செய்பவர்கள்)
6. ரைல் வி(F)ற்றர்ஸ் (மாபிள் பதிப்பவர்கள்)
7. வெல்டர் (ஒட்டு தொழிலாளர்கள்)

வெளிநாட்டுப் பயணம் என்றதும் உங்கள் நினைவில் ஒலிக்க வேண்டிய பெயர்

**"M" THREE TRAVEL**

நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

**'M' THREE TRAVEL**

தலைமைக் காரியாலயம்:
**த. இந்திரநாதன்**
**'M' Three Travel**
சற்குணவாசா
சோதிவீதி,
K. K. S.

கிளை நிறுவனம்:
இல.1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/110)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பன்குளத்தில் இருந்து மக்கள் வெளியேற்றம்

திருகோணமலை, செப்6

பன்குளம் பகுதியில் இடம் பெற்றுவரும் சம்வங்களை அடுத்து பல குடும்பங்கள் திருகோணமலைக்கு நாளாந்தம் இடம் பெயர்ந்து வருகின்றன.

இதுவரை சுமார் நூறுக்கு அதிகமான தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் திருகோணமலைக்கு இடம்பெயர்ந்து வந்து உற்றார் உறவினர்களுடன் தங்கி இருக்கின்றனர்.

அமைதிப்படையின் முகாமைச் சுற்றியுள்ள மக்களை அங்கிருந்து செல்லமாறு பணித்ததாகச் சொல்லப்பட்டது. முகாமைச் சுற்றியுள்ள குடும்பங்கள் பல ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளன.

இடம் பெயர்ந்து வந்த குடும்பங்களுக்கு பல சமூக ஸ்தாபனங்கள் உதவிகளைப் புரிந்து வருகின்றன.

அமைதிப் படையினர் அடிக்கடி நடத்தும் தேடுதல், சுற்றிவளைப்பு என்பன காரணமாகவே மக்கள் இடம்பெயர்ந்துவருவதாகச் சொல்லப்படுகிறது. (ஒ-150)

## ஆனந்தபுரத்தில் மணல் ஏற்றத்தடை

தாளையடி, செப் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆனந்தபுரத்தில் மணல் ஏற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் சட்டவிரோதமாக அத்துமீறி அப்பகுதியில் மணல், ஏற்றப்பட்டு வந்தது.

கிளிநொச்சி உதவிஅரசாங்க அதிபர் ஆனந்தபுரம் பகுதியில் மணல் ஏற்றுவதற்குத் தடை விதித்ததுடன் அதற்கான அறிவித்தல்களையும் பல இடங்களில் ஒட்டியுள்ளார்.

(இ-144)

## சோதனைஅதிகரிப்பு

தாளையடி, செப் 6

கிளிநொச்சியில் பல இடங்களிலும் இராணுவத் தேடுதலும்சோதனையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (இ-144)

## தொண்டர் பயிற்சி வகுப்பு

காரைநகர் செப் 6

காரைநகரிலிருந்து தொண்டர் பயிற்சி வகுப்புக்காக நால்வர் தெரிவு செய்யப்பட்டு பண்டத்தரிப்பு பற்றிமா கல்லூரியில் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி வகுப்புக்கள் கிராம ரீதியாக தெரிவு செய்யப்பட்டு கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் நடைபெறுகின்றன.

மேலும் இப்பயிற்சி வகுப்பில் துணைப்பாடங்களாக மனையியல், வர்த்தகம், தட்டச்சு, சுருக்கெழுத்து, தையல், ஆங்கிலம், தமிழ் ஆகியன போருட் உதவியுடன் இடம் பெறுகின்றன.

(ஒ-73) குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தல்:

# ஸ்ரீ. ல. சு. கட்சியின் பிரசாரம் தீவிரமாக நடைபெறுகிறது

கொழும்பு, செப் 6

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதிதேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே கட்சிக் கிளைகள் யாவும் புனரமைப்பு செய்யப்பட்டு அமைப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிடும் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா கிராமங்கள் தோறும் நேரடியாகச் சென்று பிரசார கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

இப்பிரசார கூட்டங்களில் எதிர்க்கட்சி தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா, முன்னாள் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

அதேநேரம் கட்சியின் சார்புடைய தொழிற் சங்கங்களும் புனரமைக்கப்பட்டு உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் செல்லும் நோக்கம் உண்டா? என திருமதி பண்டாரநாயகாவிடம் கேட்டபோது அவர் பதிலளிக்கையில்,

''நிச்சயம் வடக்கு, கிழக்கு பகுதிக்குச் செல்வேன். யாழ் விவசாயிகள் எமது பொருளாதார கொள்கையை முழுமையாக ஆதரிக்கிறார்கள். (ஒ-21)

## மட்டக்களப்பில் தமிழ் - முஸ்லிம் வர்த்தகர் சங்கம்

மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் வர்த்தகர் சங்கங்கள் அண்மையில் ஒன்றுகூடி 'தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் இணைப்புச் சங்கம்' ஆரம்பித்துள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் இருதரப்பு வர்த்தகர்களும் பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாலேயே மேற்படி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பொது நூலக மண்டபத்தில் இதுதொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இருதரப்பிலும் தலா ஐவர் உள்ளடக்கிய ஏழு வொன்று நியமிக்கப்பட்டது. (ஒ-21)

# கும்பாபிஷேக காலத்தில் தரிசனம் செய்வதுகோடிக்கணக்கான தரிசனங்கள் செய்ததற்கு சமனாகும்

சரவெட்டி, செப் 6

கும்பாபிஷேகக் காலங்களில் தெய்வ தரிசனம் செய்வது கோடிக்கணக்கான தரிசனங்கள் செய்ததற்குச் சமனாகும். இக் கும்பாபிஷேகம்முழு அளவில் விஞயகருக்கு அருளூட்டப்பட்டு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

மேற்கண்டவாறு யாழ் பல்கலைக்கழக வடமொழி போதகர் பேராசிரியர் கைலாச நாதக்குருக்கள் கைதடி வீரகத்திப் பிள்ளையார்தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழாவில் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இங்கு இடம்பெற்ற கிரிகைகள் அனைத்தும் உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மீக நலனுக்காகவும் வீரகத்தி விநாயகருக்கு அவ்வருளைப் புகுத்தி அதனூடாக அனைத்து மக்களுக்கும் நிம்மதியையும் மனவலிமையையும் கொடுப்பதற்காகச் செய்யப்பட்டன.

இந்தியாவில் முழத்திற்கு முழம் மர நிழல்களில் இருந்து கோடிக்கணக்கான மக்களுக்கு அருளைப் புகுத்துகிறார் விநாயகர். ஆனால் இலங்கையிலோ ஆலயங்களில் ஒரு மையத்தில் அமைந்திருந்து அருள் புரிவது மிகவும் சிறப்பான ஒன்றாகும்-என்றார்.

கும்பாபிஷேகத்தை பதினறு குருக்கள்மாருடனும் எட்டு சாதகாச்சாரிகள், ஐந்து உதவியாளர்களுடனும் சர்வசாதகர்கள் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் முன்னின்று நடத்தி வைத்தார்.

(ஒ-70)

# இடப்பெயர்பற்றிய முழு ஆய்வுமேற்கொள்ளவேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

காங்கேசன்துறை, செப். 6

கடந்த 70 ஆண்டுகளுக்குப் பின் தற்சமயம் இடப்பெயர்பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் இப்படியான ஆய்வுகள் எம் இனத்துக்குத் தேவையாக உள்ளன. ஆகவே முழுமையான ஆய்வு [illegible] ளர்கள் முன்வரவேண்டும்.

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை.

பண்டிதர் சி. அப்புத்துரையின் அறுபதாண்டு நிறைவையொட்டி கலாநிதி இ. பாலசுந்தரத்தால் எழுதப்பட்ட 'இடப்பெயர் ஆய்வு- காங்கேசன்துறை -கல்வி வட்டாரம்' என்னும் நூல்வெளியீட்டு விழா தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கலை இலக்கியக் கழகத்தின் ஆதரவில் கலாநிதி நா, சுப்பிரமணியன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'தமிழகத்தில் பிரதேச ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. அங்குஉள்ள பெயர்களுக்கும் இங்குள்ள பெயர்களுக்கும் நெருங்கிய நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

தமிழ்நாட்டு ஆய்வாளர்களின் உதவியுடன் இங்கு முழுமையான ஆய்வு மேற்கொள்ளப் படவேண்டும்.

கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பு ஞானப் பிரகாசர் போனறவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அறிவியல், உளவியல் வளர்ச்சி உலக வளர்ச்சி அடிப்படையில் இன்று ஆய்வு முழுமையான வகையில் அமையவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் பேசுகையில்:

'ஆய்வாளர்கள் சாதி அடிப்படையிலும் ஆய்வு மேற்கொள்ளவேண்டும் ஏனெனில் அதன்மூலம் நிறைவான ஆய்வு மேற்கொள்ளலாம்.

இன்று இவர் மேற்கொண்டுள்ள ஆய்வு பல்வேறுபட்ட நல்ல ருத்துக்களை வெளிக் கொணர்ந்துள்ளது'. என்றார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் பேசுகையில் 'உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கோரிக்கைப் படி 82 ஆம் ஆண்டில்இருந்து 86 ஆம் ஆண்டுவரை இந்த ஆய்வை மேற்கொண்டு 420 பக்கங்களில் தயார் செய்தேன். இதை அவர்களுக்கு அனுப்பினேன். அவர்கள் இலங்கை நூல் வெளியிட முடியாது என்றுகூறிவிட்டார்கள்.

89ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ஆய்வுநூல் வெளிவரும். இன்று இந் நூல் வெளிவருவதையிட்டு மகிழ்கிறேன். இதேபோன்று மற்றைய கல்வி வட்டாரத்தினரும் வெளியிடவேண்டும் என்றார்.

இலக்கண வித்தகர் இ. நமசிவாயம் பண்டிதர் அப்புத்துரைக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

'சிறுவர் இலக்கியமும் கூடல் நாடனின் பங்களிப்பும்' என்னும் தலைப்பில் அறு. வை. நாகராஜனும், பண்டிதர் சி. அப்புததுரையின் 'பதிப்புப்பணி' என்னும் தலைப்பில் மயிலங்கூடலூர் பி. நடராஜனும் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

திரு சி. சிவமகாராசா நூல் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

(இ-68)

## புனர்வாழ்வு முகாம் இளைஞருக்குப் பத்திரிகை வாசிக்கத் தடை!

யாழ்ப்பாணம், செப், 6

காங்கேசன்துறை புனர்வாழ்வு முகாமிலுள்ள இளைஞர்களுக்கு செய்திப் பத்திரிகைகள் வாசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய அமைதிப் படையினர் இங்கு வந்த பின்கைது செய்யப்படும் இளைஞர்களுக்கான புனர்வாழ்வு முகாம் ஒன்று காங்கேசன்துறையில் நிறுவப்பட்டது

மேற்படி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கு பல அசௌகரியங்கள் இருப்பதாக இளைஞர்களின் பெற்றோர் தமிழ் ஈழ மக்கள் மன்றத்தினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதை அடுத்து மேற்படி மன்றம் அமைதிப் படையினரின் அனுமதியுடன் நேரில் சென்று அவர்களைப் பார்வையிட்டு, குறைபாடுகளை அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியது.

குறிப்பாக இளைஞர்களுக்குப் பத்திரிகைகள் வாசிக்கக் கொடுப்பது மிகவும் முக்கியம் என அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

எனினும் தற்போது முகாமுக்கு செல்லும் பெற்றோர் உணவுப் பார்சல்களை பத்திரிகைகளால் சுற்றிக்கொண்டு செல்வதற்குக்கூட தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

வெற்றுக் காகிதத்தால் சுற்றப்பட்டபார்சல்களே உள்ளே அனுமதிக்கப்படும் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் புகார் கூறுகின்றனர். (ஒ-160)

## குருக்களுக்கு கௌரவிப்பு

கொடிகாமம், செப். 6


மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தையும் மண்டலாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்திய குருக்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

கிரியாவித்தகர் குருமணி சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்களையும் பிரதம குருவாகிய சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்களையும் கோயில் திருப்பணிச் சபைச் சார்பில் கோவிற் பரிகாவலர் திரு.எம். அருணாசலம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஒ-75)

## கந்தளாயில் குளத்தில் கிடந்த சடலம்

கந்தளாயில் தமிழர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுச் சடலம் குளத்தில் வீசப்பட்டுக் கிடந்தது.

சடலம் அடையாளம் காணப்படவில்லை. தமிழரின் சடலம் என நம்பப் படுகிறது. (இ-150)


நல்லூர் விளம்பர நிலையத்தில்

அண்ணா கோப்பியின்

100 gm வெற்றுப் பக்கட்டுக்களில் 10 கொடுத்து 1 ரம்ளரை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

(C/41)

ஈழம் வாழ் மக்களே!

உங்கள் கலர்ப்படங்கள் நீண்ட காலம் மங்காமல் இருக்க விரும்புகிறீர்களா?

எங்களூடாக மைக்குரோ கோம்பியூட்டர் மூலம் கொழும்பில் பிரதிசெய்து கொள்ளுங்கள்

- இலங்கையில் முன்னணியில் திகழும் FOTO COLOR LABORATORIES (Ceylon) Ltd., உங்கள் நலன் கருதி எங்களை யாழ். மாவட்ட பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள்.
- உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ப மிகவும் அழகாகவும் தெளிவாகவும் கலர்ப்படப் பிரதிகள் GLOSS/MATT, தாள்களில், நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில், கொழும்பில் பிரதி செய்து கொடுக்கப்படும். எக் காரணத்தைக் கொண்டும் யாழ்ப்பாணத்தில் பிரதி செய்யப்படமாட்டாது.
- கலர்ப்படச் சுருள்கள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!
- ஒவ்வொரு பிரதிக்கும் அறவிடப்படும் கட்டணம்: 4 ரூபா 75 சதம் மட்டுமே!
- உங்கள் படச் சுருள்கள் விமானம் மூலம் கொழும்பிற்கு அனுப்பி மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் கையாளப்படும்.

foto color LABORATORIES (Ceylon) LTD.
50, Ist. Floor, Hyde park Corner,
COLOMBO - 2

MACK TRAVELS (Pvt) Ltd., JAFFNA.

(C/48)

பிரயாண ஒழுங்குகள்

சவூதியில் வேலைவாய்ப்பு

1. ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
2. யூனிவசிற்றி கிளீனேர்ஸ்
3. மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்
4. எலெக்ரீஷியன்ஸ்
5. மெக்கானிக்
6. குழாய் வேலை செய்பவர்
7. மேசன்
8. தச்சுவேலை செய்பவர்
9. றைவேர்ஸ் (Drivers)
10. எலக்ரோனிக் மெக்கானிக்
11. ரெலிபோன் டெக்னீசியன்ஸ்

முற்பணம் அறவிடப்படமாட்டாது

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரதநிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. குப்பிளான்
கிளை 2. வன்னிச்சி கோவிலடி.

(C/49)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language

பயிற்சிக் காலம்: 40 நாள் (திங். புதன், வெள்ளி)

ஆரம்பம்: 12.09.88

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய் முறைப் பயிற்சி Amstad, EG 2000, Commodore, Laser ஆகிய கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு நாள்: 10.09.88

Computer Programming in Cobol Language

பயிற்சிக் காலம்: 3 மாதம் (சனி, ஞாயிறு வகுப்புகள்)
செய்முறை பயிற்சி ARC (IBM Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்

**UNIKCO COMPUTER CENTRE**
**No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.** (உப தபாற்கந்தோர் அருகாமை)

(C/37)



## IMMEDIATE VACANCIES IN SAUDI ARABIA

1. CIVIL ENGINEER — 10 Years Experience
Salary SR 2000 — SR 2500
2. MECHANICAL — B.Sc. + 10 Years Experience
Salary — 2000 SR — SR 2500
3. ELECTRONIC ELECTRICAL — B. Sc. + 10 Years Experience
— Salary — SR 2000 — SR 2500
4. ELECTRONIC TECHNICIAN — Diploma + 5Years Experience
— Salary SR 750 — SR 900
5. ELECTRICAL TECHINICIAN — Diploma+5 Years Experience
Salary SR 750 — SR 900
6. TELEPHONE TECHNICAN — Diploma + 5 Years Experience
— Salary SR 700 — SR 850
7. HEAVY EQUIPMENT MECHANIC — 7 Years Experience
— Salary SR 750 — SR 900
8. AIR CONDITION TECHNICIAN (WINDOW/CENTRAL TYPE) — SR 700 — SR 800
9. PLUMPER — 5 Years Experience and English Speaking
Salary SR 600 — SR 700
10. CRANE MECHANIC — 5 Years Experience
English Speaking
Salary SR 750 — SR 900
11. AIRCON PRESSER MECHANIC — 5 Years Experience
English Speaking
Salary SR 750 — SR 900
12. DIESEL / PETROL MECHANIC — 5 Years Experience
English Speaking
Salary SR 650 — SR 800
13. BOILER TECHNICIAN — 5 Years Experience
English Speaking
Salary SR 650 — SR 750
14. MARINE ENGINEER — 5 Years Experience
Salary Negotiable
15. DOCTOR — M.B.B.S — 5 Years Experience
Salary Negotiable
16. LENTH OPERATER — 5 Years Experience
Salary Negotiable
17. AGRICULTURE ENGINEER — 5 Years Experience
Salary Negotiable
18. CLEANERS (AIRPORT) — Salary SR 500
19. CLEANERS (HOSPITAL) FEMALES — Salary SR 400
30 — 44 Years SR 400
20. MASON — 5 Years Experience
21. CARPENTER — 5 Years Experience

Age 21 — 45 Years

22. TAILOR (Male) — 5 Years Experience with Cutter
Salary 700 SR

### KUWAIT

1. DRIVER (With Gulf Licences) — Salary 50 KD
2. CLEANERS — Salary 30 KD

# T. V. Travels & Tourist

Kokuvil Station (Front)
Brown Road,
**KOKUVIL.**

(C-23)


## பூஸா முகாம் கைதிகள் அழைப்பு

மட்டக்களப்பு, செப், 6
பூஸா முகாம் உண்ணுவிரத கைதிகள் முகாமுக்கு வந்து நேரடியாக தமது நிலவரத்தைப் பார்வையிடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

தமது விடுதலைக்காக குரல் எழுப்பும் சமூக, சமய நிறுவனங்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர்கள் இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

(ஒ-21)

## அரச அதிபருக்கு வேண்டுகோள்

பருத்தித்துறை, செப், 6
புலோலி மேற்கு அந்தியேட்டிக் கிரியைகள் செய்யும் மண்டபத்தை உடனடியாகக் கட்டித் தருமாறு மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

புலோலி மேற்கு, அல்வாய், பருத்தித்துறைப் பட்டினப் பகுதி போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள், இறந்தோரது அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்யும் மண்டபம் வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேசனின் போது முற்றுகச் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மக்களின் அத்தியாவசிய தேவையான இம் மண்டபத்தினை புனரமைத்து மீளக் கட்டித் தருவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திற்கு சன சமூக நிலையத் தலைவர் திரு க. தங்கராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ-சி-118)

## குப்பிளான் ஊடாக பஸ்சேவை

யாழ். நகரில் இருந்து குரும்பசிட்டிக்கு குப்பிளான் ஊடாகச் செல்லும் 770 வீதி இலக்க பஸ் சேவை கடந்த ஒரு வருட காலத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக பஸ்கள் சில யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளதால் இச் சேவையை தம்மால் நடத்தக்கூடியதாக இருக்கின்றதென்றும் — நாளாந்தம் இரண்டு பஸ்கள் இச்சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என்றும் — பஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-126)

## 254 மாணவர்கள் அனுமதி

அச்சுவேலி செப் 6
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இந்த வருடம் க. பொ. த. உயர்தரவகுப்புத் தெரிவுப் பரீட்சையின் மூலம் 254 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கணிதம் விஞ்ஞானம் தமிழ் ஆகிய பாடங்களில் க பொ. த. உயர்தர வகுப்பிற்கான தெரிவுப் பரீட்சை நடத்தப்பட்டு, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது

(ஒ சி-11)


## பாடசாலை அதிபர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, செப். 6
மட்டக்களப்பு முறக்கொட்டான் சேனைப் பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவர் அண்மையில் இனந்தெரியாத நபர்களால் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேயிட வாசியான இ. சண்முகம் (47) [illegible] சுட்டுக்கொல்லப்பட்டார்.

(ஒ-21)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**நா. மகேஸ்வரன் (வரன்)**

தாயகத்தில்: (ஜெனனம்) 1967 - 03 - 04
தியாகத்தில்: (மரணம்) 1987 - 09 - 06

மகேஸ்வரன் நாமமுடன்
மானிலத்தில் நீ பிறந்தாய்-என்றும்
அழியாய்ப் புகழ் பெற்று
கல்வி நலம் நேர்மையுடன்
சாசினியில் நீ வாழ்ந்தாய்
தாரணியில் தமிழ் காக்க
தன்னையே அர்ப்பணித்தாய்-இயக்கமதில்...!

இயக்கப் படைக்கலம்
எதிரிகள் கையில்
அகப்பட்டிடாமல் - அவற்றைக்காக்க
முன்னே நீ சென்று...
நின்னுயிரை நீ கொடுத்தாய்
காரணம் என்ன உண்டு
கடத்திட உன்னை இங்கு?
மாற்றுனை மாட்டிடவே
மல்லர்கள் வந்தனர்...!

புரிந்துணர்வு இல்லா
உலுத்தர் கூட்டம்
புதைக்குழியில் ஆழ்ந்த சேதி
வருடம் ஒன்றுக்குள்
மடிந்திட நாம் கண்டோம்
மலர் மணமாய் மணம் கமழ்ந்த
உன் புகழை மக்களால்
இயம்பிய சொற்கேட்டு
துயராய்த் துடிக்கின்றோம்
உன் குடும்பத்தார் ........!

பண்பின் உறைவிடமே...!
பாசத்தின் பிறப்பிடமே...!
வீரத்தின் விளை நிலமே...!
விடுதலை ஒன்றையே உயிர்
மூச்சாகக் கொண்ட வீர மறவனே...!
என்றும் உன் இலட்சியம் நிறைவேறவும்
உன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கும்...!

பெற்றோர், உடன்பிறந்தோர்,
உறவினர், நண்பர்கள்.

அம்பலவன் பொக்கணை,
முள்ளிவாய்க்கால்-முல்லைத்தீவு. (6130)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. வல்லிபுரம் முத்தையா**

மலர்வு: 20 - 10 - 1905
உதிர்வு: 07 - 08 - 1988

எங்கள் குடும்ப ஒளி விளக்கே! நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல. 50, கச்சேரி நல்லூர் ரோட்,
யாழ்ப்பாணம்.

(6132)


# A/L 89
## DAY CLASSES

ஆரம்பம்:- 05-09-88

Chemistry - Bar மாஸ்டர்
Physics - நந்தகுமார்
Botany - பாலா
Zoology - நரேன்-குலேன்
Pure Maths / App. Maths - சந்திரமோகன்

(C103)



# A/L 89
# A/L 90

Economics - சண்
Accounts - பிரபாகரன்
Commerce - கேசவன்
Logic - சோதிலிங்கம்
Hindu Civil - ஜோதீஸ்வரன்
Tamil - சுந்தரலிங்கம்
Geography - ஜேசுதாஸ்
Pol. Science - நிர்மலன்

DAY CLASS-14-09-1988
SAT - SUN -10-09-1988
ஆரம்பமாகின்றன

**BOND INSTITUTION**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C104)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளான நாகராசா, தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையார் சி. தம்பிராசா 07. 08. 88 அன்று இறைபடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
சுன்னாகம், குப்பிளான்,
வன்னிச்சி கோவிலடி. (C/ 102)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22- 02- 1911
மறைவு: 20- 08- 1987
திதி: 06.09.1988

**திரு. சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர்)

ஓராண்டு கழிந்தாலும் உன்பிரிவு
நினைவலைகள்
பேராருய்த் தண்ணளிசேர்
பெருக்கெடுத்து வற்றுத
நீராக அலைமோதி நிறைநெஞ்சம்
குளிர்விக்கும்
சீராளா நின்னுருவ நிழல் நெஞ்சம்
நீங்காதே.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டன்.

(6311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.

**பொருள்:**

ஒருபொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 32073
06-09-1988 த. பெ. இல 23


# முல்லைத்தீவு விவசாயம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஐந்து, ஆறு தினங்களாக ஊரடங்கு இரண்டு மணி நேரத்துக்குத் தளர்த்தப்படுவதாகச் செய்தி கிடைத்துள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் முப்பதாம் திகதிவரை மூன்று மணிநேரம் தவிர்த்து அமுலான தொடர்ச்சியான ஊரடங்கால் வீட்டுக்குள் அடங்கிப்போய் இருந்த முல்லைத்தீவு மக்களுக்கு. இப்போதைய இரண்டு மணிநேரத் தளர்வு ஓரளவு ஆறுதலைத் தந்திருக்கும்.

எனினும், அச்சம் காரணமாக இரண்டு மணிநேரத் தளர்வின்போது கூட, மக்கள் அதிக அளவில் வெளியில் நடமாடவில்லை என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

முல்லைத்தீவு மக்கள் கடந்த சுமார் ஒரு மாத காலத்துக்கும் மேலாகப் பெரும் இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருவது எல்லோரும் அறிந்த விடயம். அப்படி இல்லை என்று எவரும் மூடிமறைக்க முடியாத விடயம்.

முல்லைத்தீவு வாழ் மக்களின் இந்த அவலங்களுக்கும், கஷ்டங்களுக்கும் காரணம், இந்திய அமைதிப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளை அடக்குவதாகக் கூறி மேற்கொண்ட, மேற்கொள்ளும் 'செக்மேற்' இராணுவ நடவடிக்கை என்பதை எவரும் மறுத்து உரைக்க முடியாது.

இரண்டு நாள், மூன்று நாள் தொடர்னுயான ஊரடங்கு என்றாலே மக்களால சகிக்க முடியாது. மக்கள் தத்தமது நாளாந்தக் கடமைகளை, அலுவல்களை சுதந்திரமாகவும், பயமின்றியும் செய்வதற்குத் தடைவிதிப்பதே, அந்தச் சுதந்திரத்தைப் பறித்துக் கொள்வதே, ஊரடங்கு விதி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டுத்தான் ஊரடங்கு அமுல் செய்யப்படுகிறது என்பது உண்மைதான் அதற்காக காலவரையறையில்லாத தொடர்ச்சியான ஊரடங்கு, மக்களின் அடிப்படை, ஆதார உரிமைகளைப் பறிக்கும் செயல் என்பதை எவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

சட்டங்களும், நடவடிக்கைகளும் மக்கள் வசதிக்காகவே அன்றி அவர்களைத் துன்புறுத்தவும், இடைஞ்சல் தருவதற்காகவும் இல்லை என்பதை அதிகாரத்தில் உள்ள பலரும் மறந்துபோவது இப்போது இங்கு மட்டுமன்றிப் பல நாடுகளிலும் வழக்கமாகி விட்டது. இந்த நிலைமை மாறவேண்டும் என்பது பொதுவாக எல்லா மக்களின் விருப்பமுமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக அமுல் செய்யப்பட்ட ஊரடங்கால் அங்கு பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவியதாகவும், நோய்கள் பரவியதாகவும், நோய்வாய்ப் பட்டவர்களைச் சிகிச்சைக்குக் கூட்டிச் செல்ல முடியாததால் பலர் மரணத்தின் தறுவாயிலை அடைந்ததாகவும் தகவல்கள் கிட்டின. ஊரடங்கு முற்றாக நீக்கப்பட்டால் அதைவிட மேலும் பல பாதிப்புக்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கும் என நம்பலாம்.

குறிப்பாக முல்லைத்தீவில் விவசாயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு பெரிதாகும்: சிறுபோக அறுவடைக் காலமும், பெரும்போக ஆயத்த காலமுமாகக் கடந்த மாதம் விளங்கியதால், இருபக்க நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு வருட காலத்திற்கு முல்லைத்தீவு விவசாயிகள் விவசாயத்தைப் பற்றி நினைத்தும் பார்க்க முடியாது என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், விவசாயிகளுக்கும், அப்பகுதியில் விவசாயம் செய்பவர்களுக்கும் நன்கு தெரியும்.

மக்களுக்கு ஏற்பட்ட உள, உடல் பாதிப்புகளை ஒருபுறம் தவிர்த்துப் பார்த்தாலுங் கூட, விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பு மட்டுமே முல்லைத்தீவு மக்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது எனலாம். இந்தத் தாக்கத்தை ஈடுசெய்ய, நஷ்டஈடு வழங்க யார் முன்வருவார்கள்?

ஏற்கனவே ஐந்து ஆறு வருடங்களாகச் சகல விதங்களிலும் பாதிக்கப்பட்டு, நொந்து போயிருக்கும் தமிழ்ப்பகுதிகளை, தமிழ் மக்களை தொடர் ஊரடங்குகளும், இராணுவ நடவடிக்கைகளும் நிச்சயமாக மேலும் பாதிக்கும் துன்புறுத்தும் என்பதை எவரும் மறந்து விடலாகாது இவற்றை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்குத் தேவை எது? இராணுவச் சூழ்நிலை மாறவேண்டும். இராணுவச் சூழ்நிலையை மாற்ற அரசியல் தீர்வுகள், மன விருப்பத்துடன் காணப்படும் அரசியல் தீர்வுகள் அவசியத்திலும் அவசியம்.

## அமைதி பேணுக!
### கூர்க்கா தலைவர் கோரிக்கை

டார்ஜீலிங், செப் 5

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியின் பின்னால் வெளிநாட்டுச் சக்திகள் இல்லை என்று முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் தெரிவித்தார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

டார்ஜீலிங் கூர்க்கா மலை வளர்ச்சி மன்றம் விரைவில் நிறுவப்படும். மக்கள் வன்செயல்களில் ஈடுபடாமல் அமைதி பேண வேண்டும்.

கூர்க்கா போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். என்று தெரிவித்தார். (எ)

### மாஸ்கோவிலும் கலகம் அடக்கும் படை

மாஸ்கோ, செப்.5

சட்டவிரோத அரசு எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்க சோவியத் அரசு விசேட கலகம் அடக்கும் படைஒன்றை நிறுவியிருக்கிறது.

படையின் தளபதியாக விளாடிமார் ஐவ்ஞெவ் பணியாற்றுகின்றார் (எ)

ஜனநாயக முறை இல்லை என்றால் ஆபத்து;

# பர்மாவில் இரத்த ஆறு ஓடும்
# அமெரிக்க செனட்டர் எச்சரிக்கை!

ரங்கூன், செப் 5

பர்மா அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது என்று அமெரிக்க காங்கிரஸின் பிரபல செனட்டர் ஸ்ரீபன் சோலார்ஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கு எதிரான கிளர்ச்சி தொடங்கிய பின்னர் பர்மாவுக்கு விஜயம் செய்த முதலாவது மேற்கு நாட்டு ராஜதந்திரி ஸ்ரீபன் சோலார்ஸ்.

நேற்று ரங்கூன்சென்ற அவர், அரசுத் தலைவர் மொங் மொங்குடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களை அவர் சந்தித்தார்.

அமெரிக்கக் காங்கிரஸின் ஆசிய, பசுபிக் வெளிவிவகாரக் கமிட்டித் தலைவரான செனட்டர்சோலார்ஸ் அப்போது சொன்னதாவது;

பர்மா அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

ஜனநாயக நடைமுறைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை தடுக்க முடியாது.

இப்படி செனட்டர் சோலார்ஸ் எச்சரித்தார்.

இதனிடையில் இராணுவ, விமானப்படைகளின் சில பிரிவுகள் அரசு எதிர்ப்புக் குழுக்களுடன் சேர்ந்து கொண்டதாக வெளியான தகவலை பர்மா அரசு மறுத்து உள்ளது.

இதேவேளை, அரசில் இருந்து பல முக்கிய பிரமுகர்கள் இராஜினாமாச் செய்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது [எ]

### வரவேற்பு

கம்பூச்சியன் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண உதவும் நடவடிக்கைகளை எடுப்பதில் சீன-சோவியத் அரசுகள் கூட்டாக ஈடுபடுவதை வியட்நாம் வரவேற்றுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### சுகாசினிதிருமணம்

நடிகை சுகாசினி டைரக்டர் மணிரத்னம் இவர்களின் திருமணம் சென்ற 26 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது.

சனிக்கிழமை (27 8 88) திருமணம் நடைபெறும் என்று அழைப்பிதழ் கொடுக்கப் பட்டிருந்தது

ஆனால் திடீரென்று ஒரு நாள் முந்தி திருமணம் நடந்தது.

சையத்மோடி கொலை:

## ஜன்மோர்ச்சா எம்.பி சஞ்சய்சிங் கைது!
## விசாரணையில் புதிய திருப்பம்

லட்சுமணபுரி, செப் 5

இந்திய பாட்மின்டன் சாம்பியன் சையத்மோடி கொலை தொடர்பாக அவரின் மனைவி அமிதா கைது செய்யப்பட்டிருந்தார் அல்லவா!

அவர் இப்போது பிணையில் இருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்

இதனிடையில் ஜன்மோர்ச்சாதலைவர் வி பி. சிங்கின் நெருங்கிய ஆதரவாளரான டாக்டர் சஞ்சய் சிங்குடன் தனக்குத் தொடர்பு இல்லை என்று அமிதா கூறியிருக்கிறார்.

இதனிடையில் ஜன்மோர்ச் தலைவர் வி பி சிங்கின் நெருங்கிய ஆதரவாளரான டாக்டர் சஞ்சய் சிங்குடன் தனக்குத தொடர்பு இல்லை என்று அமிதா கூறியிருக்கிறார்.

''சினிமா நடிகர் சஞ்சய் னுடன் தான் நான் விருந்தினராக தங்கி இருந்தேன் டாக்டர் சஞ்சய்யானுடன் எனக்குத் தொடர்பு கிடையாது''—இப்படி அமிதா பொலீஸுக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

செயத் மோடிபாட்மின்டன் பயிற்சியைமுடித்துக் கொண்டு லக்னோ விளையாட்டரங்கில் இருந்து வெளியேறுகையில்இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

பிரபல இந்திய பாட்மின்டன் வீரர் சையத் மோடி கொலை வழக்குத் தொடர்பாக ஜன் மோர்ச்சா கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சஞ்சய் சிங் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

டாக்டர் சஞ்சய் சிங் உத்தரபிரதேச மாநில சட்டசபையில் அமெதி தொகுதி எம். எல். ஏ ஆக இருக்கிறார். (ஒ-எ)

### சிந்து மாகாணம் அவசர நிலைரத்து!

கராச்சி, செப். 5

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் அவசர காலச்சட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

ஜனுப் அக்வர் அலி. காலி முதலமைச்சராக பதவி ஏற்றதைத் தொடர்ந்து சிவில் ஆட்சி கொண்டு வரப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

வெளி உலகில்

## பின்சோவைப் பதவி விலகக்கோரி சிலியில் மக்கள் கிளர்ச்சி;

சந்தியாகோ, செப் 5

சிலி ஜனுதிபதி ஜெனரல் பினசோவை பதவி விலகும்படி கோரி சிலி தலைநகரானசந்தியாகோவில ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

கலகம் அடக்கும் படை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினர். கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

சுமார் நூறு பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

சிலியின் பிரதமர் அலண்டே கொலையுண்ட பின்னர் ஜெனரல் பின்சோ பதவிக்கு வந்தார் தொடர்ந்து 15 ஆண்டுகளாகப் பதவியில் இருக்கும் அவர், மேலும் 8 ஆண்டுகள் பதவியை நீடிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.

அதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

### போலந்து நிலைமை திருந்துகிறது!

வார்ஸோ, செப். 5

போலந்து நாட்டில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி தொழிற்சங்கத் தலைவர் வால்சே கேட்டிருக்கிறார். தனது தலைமையில் இயங்கும் சொலிடாரிட்டி தொழிற் சங்கத்தின் மீதான தண்டனையை நீக்குவது குறித்து போலந்து அரசு ஆராய்ந்து வருவதாக திரு. வால்சே தெரிவித்தார். (எ)

## பங்களாதேஷில் பெருவெள்ளம்; 1 கோடி பேர் பாதிப்பு; 800 பேர் பலி

பங்களாதேஷில்வெள்ளம் காரணமாக ஒரு கோடிக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகின்றது.

இதுவரை 800க்கு மேற்பட்டோர் பலியாகி விட்டனர். அவசரஉதவிகளை வழங்கும்படி உலக நாடுகளை ஐ. நா. சேட்டிருக்கிறது.

கடந்த 35 ஆண்டுகளில் ஏற்பட்ட வகையிலும் பார்க்க மிக மோசமான வெள்ளப்பெருக்குஎன்று இது வர்ணிக்கப்படுகிறது. (எ)

### 'பணி' இதழ்

பருத்தித்துறை, செப்6

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் ''பணி'' என்ற பெயரில்மாதாந்தசெய்தி இதழ் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டுள்ளது

இதற்கான நிதியினை உதவி, இணைந்து செயற்படுமெதென போரூட் ஸ்தாபனம் முடிவு செய்துள்ளது.

இலவசமாக வெளியிடப்படும் இச்செய்திப் பத்திரிகை சகல பொது ஸ்தாபனங்களுக்கும் அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ஒ-118)

### படையினர் பவுஸர் மூலம் குடிதண்ணீர்

மட்டக்களப்பில் புதிதாக ஆசிரிய நியமனம் பெற்றவர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையம் ஒன்றுக்கு இந்திய படையினர் தமது பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்கிறார்கள்.

புனித சிசிலியா மகளிர் வித்தியாலயத்தில் பயிற்சி பெறும் ஆசிரியைகளுக்குத்தான் படையினரால் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. (ஒ-21)

காரைநகரில் கம்பன் விழா:

## இன்றைய நெருக்கடியிலும் இலக்கிய ஆர்வம் குன்றாததுக்கு கம்பனே காரணம்

காரைநகர், செப்,6

கம்பன் பதவியைத் துறந்து தமிழை வளர்த்தவன். அது போலவே எமது வீர விடுதலைப் போராட்டமும் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலும் இலக்கிய ஆர்வம் குன்றாது உள்ளனர் என்றால் உண்மையில் கம்பன் மகிமையின் பெறுபேறு வெளிப்பட்டு நிற்பதே இதற்குக் காரணம்.

காரைநகர் கம்பன் விழாவில் உரையாற்றிய பண்டிதை பொன் பாக்கியம் மேற்கண்டவாறு கூறினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி மங்கள இசையுடனும் மங்கள விளக்கேற்றல், வாழ்த்துப்பா போன்றவற்றுடனும் ஆரம்பமானது

உறவே பலையானது பற்றி கலாநிதி நா.சுப்பிரமணியஐயர் உரையாற்றுகையில், ''இன்றைய உறவு முறை சரியாக அமைய எமக்கு கம்பராமாயணம் பெரும் துணை புரிகிறது. அதை ஒட்டியே எமது சமுதாயம் வார்த்தெடுக்கப்பட வேண்டும்'' என்றார்.

எதை எதை வியப்பம் என வரும் வளப்பம் பற்றி உரையாற்றிய பேராசிரியர் சண்முகதாஸ் ''இன்றைய நாகரீக தேய்விற்கு மேலைத்தேய நாகரிகம் ஒரு காரணமாக அமைகின்றது. எனவே எமக்கு துணை புரிய ஒரு வழிகாட்டியாக கம்பராமாயணம் விளங்குகிறது'' என்றார்.

வழமையான விழா அமைப்புடன் மாலை நிகழ்ச்சிகள் தொடங்கப் பட்டன. படைத்தவனை சந்திக்கும் பாத்திர அமைப்புகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

இரண்டாம் நாள் கம்பன் விழா நிகழ்ச்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்ந்தனர். (இ-71)

## பஜனை பாதயாத்திரை நயினையிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவையொட்டி வருடாவருடம் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜத்தினரால் நடத்தப்படும் பஜனைப் பாதயாத்திரை நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து இன்று 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புறப்படுகிறது.

குறிகாட்டுவான் மனோன்மணி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து தேர்த் திருவிழாவன்று அதிகாலை நல்லூர் கந்தன் ஆலயத்தை வந்தடையும்.

கடந்த 23 ஆண்டுகளாக மேற்படி பாதயாத்திரை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பாலர்களுக்கு அடிப்படை அறிவூட்டும் கல்வி நூல்
### நூல்வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப் 6

''பாலர் கல்விக்கழகத்தின் மூன்றாவது வெளியீடான 'மழலைத் தமிழ் இன்பம்' பாலர்களுக்கு அடிப்படை அறிவை ஊட்டி அவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாய் நடமாட உதவும் ஒரு சிறந்த கல்வி நூலாகும்.''

பாலர் கல்விக் கழகத்தினரின் ஆதரவில் கடந்த ஞாயிறன்று யாழ். சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற 'மழலைத் தமிழ் இன்பம்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் உரை நிகழ்த்திய ஆசிரியர் திரு. சந்திரபோஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; 'சமகாலச் சூழ்நிலையில் இப்படியான ஒரு புத்தகம் வெளிவருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று'' என்றார்.

கழகத் தலைவர் திரு. ஆ செல்லையா தலைமையுரை நிகழ்த்தினார்.

பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் திரு ஸ்ரீதரசிங் முதற்பிரதியைப் பெற்றார்.

திரு. ஆ தவகோபால் நன்றியுரை கூற தேவாரத்துடன் விழா இனிது நிறைவெய்தியது. (இ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## இப்ப அருள் இன்னல் தீர நல்லூர் வேலவா!

நல்லூரி ற்குடியிருக்கு நல்லைநாதா! எம்
அல்லலு க்குவிடிவில்லை யோஅப்பா முருகா!
சில்லறை யாதமிழன் உயிர்சிந்து வதற்கு
வல்வினை யுந்திரவழி வடிவமில் லையா?

நல்லூரி ற்குடியிருக் குநல்லை வேலவா!
பல்லாயி ரவர்சரண டைந்தவீ ட்டுக்கா
ரனு(ம்)
எல்லையிலா அருள்சுரந் தணைத்து க்காத்தவா!
பல்லுயிர் க்காபணயமி தைப்பார்த்
திருப்பதோ!

என்வீட் டுக்காரரென் று ஏக பத்தினி
தன்நாய கனைக்கூறு வபோல் நவில நானுமே
என்மன வீட்டுநாய கனேஏக நாயகா!
தன்னிய ல்பாய்நட க்கவிட்டா ய்நன்றி
வேலவா!

உன்னழ கைக்காண வுமேஓடி வருகிறார்
உன்னரு கேஅணைந்து துயர்கூட வருகிறார்
உன்னரு ளேவேண்டி நிதம்அகத்
திருக்கிறேன்
உன்னழ கைமானசீ கமாகப்பா ர்க்கின்றேன்.

அப்பனே! இப்பவுள் ளஇடரும நந்தம்
தப்பவழி இல்லையே எனவருமே ங்கிறார்
சப்பலடி சாம்பலடி சலித்துப் போகிறார்
இப்பஅ ருள்!இன் னல்தீரந ல்லூர்வேலவா!!

— ச. பொ. பாலசிங்கம்

மாகாணசபைத் தேர்தல்:

## கிழக்கு மாகாணம் முழுவதும் போட்டியிடும் என்கிறார் அஸ்ரப்

மட்டக்களப்பு,செப்6

மாகாணசபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படுமானால் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலும் போட்டியிடும்

இத்தகவலை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனுப் ஏ. எச். எம். அஸ்ரப் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் சமரசத் தீர்வு காண முன்பு தேர்தல் நடைபெறக்கூடாது என்பதை நாம் விரும்புகின்றோம்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் மாகாணசபையில் முஸ்லிம்களின் அங்கத்துவம் இல்லாவிட்டால் யார் குரல்எழுப்புவது என்றார். [ஒ-11]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரீ. வி, டெக், றேடியோ திருத்தவும்
புதிய பாடல்களைப் பதிவு செய்யவும்

**எலெக்ரோ றெவ்-கூல் எஞ்சினியர்**

கொக்குவில் சந்தி, கொக்குவில்.

அத்துடன் வீட்டு மின்னிணைப்பும் செய்து கொடுக்கப்படும்.

# உதயன்

06 - 09 - 1988 செவ்வாய்க்கிழமை

சிறந்த முறையில்

✱ குளிர் சாதனப்பெட்டிகள்
✱ குளிரூட்டிகள்

திருத்திக் கொள்ள,

**எலெக்ரோ-றெவ்-கூல்எஞ்சினியர்**

கொக்குவில் சந்தி, கொக்குவில்.

"நாடகம், அரங்கம் சார்ந்த அறிவு பயிற்சி என்பவற்றின் அவசியம்"

விரிவுரை வழங்குபவர் :

குழந்தை M. சண்முகலிங்கம்

11-9-1988 காலை 9-30 — 12-30

கலந்துகொள்ள விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

திருமறைக் கலாமன்றம்
223, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C/52)

## கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப் 6

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ்-கொழும்பு பஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஏழு மணி அளவில்வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நாற்பது பயணிகள் இந்த பஸ்சில் பயணம் மேற்கொண்டனர். (ஒ-10)

## பாதிக்கப்பட்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

லட்சத்து50ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு வகைகள் வழங்கப்பட உள்ளது. (ஒ-9)

**உடன்** தொடர்பு கொள்ளவும்

கீழ்காணும் பெயர்களை உடையவர்களின் குவைற் விசா என்னிடம் உள்ளது.

| | |
|---|---|
| K. மகாலிங்கம் | — H 0452930 |
| K. T. நாகேஸ்வரன் | — J 0069367 |
| K. S. சத்தியராஜா | — H 0130971 |
| S. புஸ்பராஜா | — J 0272475 |
| A. சிவநாதன் | — J 0242728 |
| S. S சிவக்குமார் | — H 0231881 |
| K. M. சிறிபாலன் | — H 0057586 |
| S. சிவலிங்கம் | — F 321904 |
| V. P. குலசேகரம் | — H 0322207 |
| V. V. சந்திரசேகரம் | — H 0051063 |
| R. நாகரட்ணசிங்கம் | — H 0166494 |
| N. உதயராஜா | — H 0480645 |
| A. செல்வச்சந்திரன் | — J 0118253 |
| K. சிவராஜா | — H 0340885 |
| K. K. வசந்தராஜன் | — J 0342893 |
| K. பிறேமதாஸ் | — H 279950 |
| R. R. விஜயகுமார் | — J 0341448 |
| M. M. சின்னராஜா | — J 0401625 |
| E. R. பொன்னையா | — H 0401363 |
| M. K. மகேந்திரன் | — G 0473437 |
| A. சுந்தரம்-இந்திரா | — H 0090994 |

மேலும் உடனடியாகத் தேவை

● குவைற்

| | |
|---|---|
| கிளீனேர்ஸ் | — 35 KD |
| மேசன் (கூலியாட்கள்) | — 50 KD |
| பணிப்பெண்கள் | — 30 KD |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**N. சுரேந்திரன்**
( சுரேன் )

நவாலி கிழக்கு, மானிப்பாய்.
(ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலுக்கு அண்மையில்)
(6142)

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 89, 90**

கலை, வர்த்தகம்

பிரிவு 3

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| அளவையியல்: | S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| தமிழ்:- | செல்வி மீரா |
| இந்து நாகரிகம்:- | ஜோதீஸ்வரன் |
| புவியியல்:- | இக்னேசியஸ் |
| அரசியல்:- | சுந்தரமூர்த்தி |

ஆரம்பம்: 10.9.1938
சனி 9.00 A.M.

**பொருளியல் A/L 89**
புதிய பிரிவு- தேசியவருமானம்
சனி 10.9.1988 1.00 P. M

( /105)

## ஒரு காட்சியின் வசூல் பூஸா குடும்பத்தவருக்கு
### மினி சினிமா சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம் செப் 6

யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை பூஸா கைதிகளுக்கான குடும்பத்தவர்களின் உதவிக்கான நிதி ஒன்றை யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்திடம் கையளிக்க உள்ளது.

இதன்படி யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கும் அனைத்து மினி சினிமா உரிமையாளர்களும்எதிர்வரும் ஞாயிறு காலை 10 30 மணி காட்சியின் வசூல் முழுவதையும் இந்த நிதிக்கே வழங்கி விடுவது என்றும்-

மாநகர எல்லைக்கு வெளியேயுள்ள மினி சினிமாக்களின் ஒரு குறிப்பிட்ட நாளின் வசூலை முழுமையாகவழங்குவது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இவை அனைத்தும் திரட்டப்பட்டு ஆணையாளரிடம் கையளிக்கப் படும். (ஒ-9)

## எம். பி. பி. எஸ். பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம் செப் 6

மருத்துவத்துறை (எம்.பி.பி.எஸ்.) இரண்டாம் வருடம் பரீட்சையில் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து சித்தியடைந்தோர் விவரம் வருமாறு;

கே. சுஜன்தன், ஆர். பாலசுப்பிரமணியம், பி. ரேணுகா, ஆர். வாசவன், செல்வி பி. அம்பிகா, ரி. கௌரிகாந்தன், சி. கௌரிசங்கரன்

ரி. கடம்பநாதன், எம். ஞானகுமார், வீ ஞானரட்னம், எஸ். இளங்கோ, கே. கதிர்காமநாதன், செல்வி வி. லலிதா, செல்வி மேரி ஊர்மிளா, செல்வி என். பிரேமா.

எஸ், பிறேமகிருஷ்ணா, வீ. ரவீந்திரன், செல்வி பி. சௌமினி, ரி ஸ்ரீனிவாஸன், கே. ஸ்ரீபிரதாபன், வீ. ஸ்ரீகௌரீஸ்வரன்,

செல்வி என்.சாந்தினி, செல்வி ரி. தாக்ஷாயினி, என். தயாபரன், பீ. தேவகுமார், செல்வி கே. தயாளினி, எஸ். லவன்.

மேற்படி பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த ஆர். சிவகுமார் என்ற மாணவர் சுப்பிரமணியம் மகாதேவா புலமைப் பரிசையும், சார்ள்ஸ் கனகசுந்தரம் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தை செல்வி எம் ஜமுனாவும், பெற்றிருக்கிறார்கள்.

### நூனசித்தி

இந்தப் பரீட்சையில் நூனசித்தி (Refferred) அடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு;

ஜி சி. தர்மேந்திரா, எம். கெங்காதீஸ்வரன், எஸ். பிரேமச்சந்திர பாரதி, ஆர். வசந்த குமார். என். விவேகானந்தன், எம். வேலாயுதன், எஸ். ஜோசப், ஜே. கே. ரகுநாதன் (ஒ-ஐ)

## இரத்தத்துக்கு.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விட்டு 150 பைந்துவரையான இரத்தத்தை வங்கியில் வைத்திருந்தோம்.

ஆனால் தற்பொழுது மிகக் குறைவான இரத்தமே எம்மிடம் கைவசம் உண்டு.

தற்பொழுது 300 பைந்திற்கு மேற்பட்ட அளவு இரத்தத்தைச் சேமித்து வைக்ககூடிய சாதனங்கள் கைவசம் உண்டு

சராசரிதினமும் சாதாரண பாவனைக்கு 15 லீற்றர் வரையான இரத்தம் தேவை. அதிலும் அசம்பாவிதங்கள் நடைபெற்றால் இந்த அளவு கூடிவிடும்.

இந்நிலையில் திடீர் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் இரத்தத் தட்டுப்பாடு காரணமாகப் பலரைக் காப்பாற்ற முடியாதுபோகலாம்.

இவ்வாறான இரத்தத் தட்டுப்பாட்டுக்கு இரத்ததானம் செய்ய மக்கள் தயங்குவதேகாரணமாகும்.

அண்மையில் சேவைக்கால முன்பயிற்சிபெறும் நூற்றுக்கு மேற்பட்ட ஆண் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியாளர்களிடம் இரத்தம் கேட்டபோது அவர்களில் பலரும் இரத்ததானம் செய்ய மறுத்துவிட்டனர்.

இவ்வாறு படித்தவர்களே இரத்ததானத்தையிட்டுக் கலங்கும் போது சாதாரண பொதுமக்கள் மட்டும் எவ்வாறு முன்வருவர்.

இவ்வாறு அவர் கேட்டார். (ஒ-9)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியம்மா அகஸ்ரின்

திருமதி மரியம்மா அகஸ்ரின் 03.09.1988 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அகஸ்ரினின் அன்பு மனைவியும், S.A. ஜோசப் [Sub Collector, Customs]. திருமதி திரேசா இம்மானுவல், S.A.ஜேம்ஸ் (ஓமான்) ஆகியோரின் அன்புத் தாயாரும், றெஜினா, S.C. இம்மானுவல் (இளைப்பாறிய ஆசிரியர், லண்டன்), யோகராணி ஆகியோரின் மாமியாரும், இளைப்பாறிய ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, ஞானப்பு, சுவாம்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 06-09-1988 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரேசா இம்மானுவல்,
யோகராணி ஜேம்ஸ்.

49, கோவில் வீதி,
யாழ்ப்பாணம், ( 6315 )

## திரு. சங்கரப்பிள்ளை யோகராசா

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை யோகராசா அவர்கள் (முன்னாள் பிரதம லிகிதர், சீனிக்கூட்டுத் தாபனம், சர்வோதயம் - மன்னார்) ஞாயிறு (04-09-88) மாலை காலமானார். இவர் திருமதி சரஸ்வதியின் அன்புக் கணவரும், உருத்திராங்கனி, ஐராங்கனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

தகவல்:
ஆ. சுந்தரலிங்கம்.

(C 51)

## பாக்கியம் வையாபுரி

திருமதி பாக்கியம் வையாபுரி காலமாகிவிட்டார். அன்னார் திருக்கேதீஸ்வரம்முன்னைநாள் தபால்அதிபர் ஓ வையாபுரி அவர்களின் மனைவியாரும், ராஜராஜேஸ்வரன், ராஜராஜேஸ்வரியின் தாயாரும் ஜெகதீஸ்வரி, டாக்டர்கலைவராஜன் (டிக்கோயா அரசினர் வைத்தியசாலை) அவர்களின் மாமியாரும் இந்திரஜித், கஜேந்திரஜித், பிரிந்தா, சபிலன, அனந்தி ஆகியோரின் பேத்தியுமாவார்.

இவரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 41, பலாலிவீதி இல்லத்தில் இருந்து 6.9 88 மாலை 3 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஓ- வையாபுரி

(6152)

## திருமதி குமாரு சின்னப்பிள்ளை


அரசடி 4ம் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி குமாரு சின்னப்பிள்ளை 4-9-88 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற குமாருவின் அன்பு மனைவியும், சிவரட்ணம், சிவராஜா (இந்தியா), ராஜரட்ணம் (அபுதாபி), குணரட்ணம் (பிரான்ஸ்), பராசக்தி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயுமாவார். இவரது ஈமக்கிரியைகள் நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

தகவல்:
கு. சிவரட்ணம்

(6153)

## இறைவனில் இணைந்த
## 31-ம் நாள் நினைவஞ்சலி



**வரப்பிரகாசம் - போல்**
(யாழ். பொலீஸ் உத்தியோகத்தர்)

மலர்வு : 28 - 4 - 1949
உதிர்வு : 7 - 8 - 1988

அன்பின் உருவாய், அனைவருக்கும் இனியவராய், பண்பின் சின்னமாய், இன்முகம் காட்டி, இனிதாய்ப் பேசி, நல்லதொரு தலைவனாக, நண்பனாக, மகனாக, இலட்சிய வீரனாய் எங்கள் நெஞ்சமெலாம் நிறைந்திருந்தீர் ஐயனே ! உம்மையிழந்து சுரந்த நீர் காயவில்லை, கண்ணீர் மழை ஓயவில்லை, பாசத்தின் பிறப்பிடமே, பண்பதனின் உறைவிடமே, எம் நினைவெல்லாம் உம்மிடமே.

அன்னாரின் இறுதிச் சடங்கின் போது கலந்துகொண்டவர்கள், உதவிகள் செய்த அன்பர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் எமது தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 6-9-1988 செவ்வாய்க்கிழமை காலை 7-00 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

(6321)

## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. அலோசியஸ் அமிர்தநாதன்**
(பொறியியலாளர்)

மலர்வு: 18—09—1950
உதிர்வு: 06—09—1984

அன்பும், பண்பும், அறிவும் கொண்ட எம் குடும்பத் தலைவா! ஆண்டுகள் நான்கு கடந்தாலும், உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாக இருக்கும்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
மைத்துனன், உற்றார்,
உறவினர்.

68, பலாலி றோட்,
யாழ்ப்பாணம். ( 6136 )

## யாழ். பல்கலை....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்க வேண்டும். இதுசம்பந்தமாக ஏற்கனவே பல கோரிக்கைகள் அரசாங்கத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இதுவரை கிடைக்கவில்லை. அவற்றைத் தரும்படி மீண்டும் கோரிக்கை விடுக்க விரும்புகிறோம். பெற்றோரும் மாணவரும் கூடவே இணைந்து இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

### பரீட்சை

கலைத்துறை வெளிவாரி பட்டப் படிப்புக்கான பரீட்சைகளை யாழ் பல்கலைக் கழகத்தில் நடத்துவதன்மூலம் யாழ் மாணவர்கள் பல சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

தற்போது மாணவர்கள் இந்தப் பரீட்சையை எழுதுவதற்காக பேராதனைகுச் செல்லவேண்டியிருக்கிறது,

யாழ் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ படிப்புக்கான பீடம் ஒன்றையும், சைவசித்தாந்த படிப்புக்கான பீடம் ஒன்றையும் அமைப்பதற்கான அனுமதி தருமாறும் அரசாங்கத்திடம் கேட்கவுள்ளோம்.

இந்த இரண்டு நிலையங்களையும் அமைப்பதற்கான கோரிக்கை முன்னரும் விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் [illegible] தரவில்லை. (அ-ஐ)

## போராளி----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேற்படி அடிக்கல் நடும் விழாவில் தமிழ் ஈழ மக்கள் மன்றத் தலைவர் கே. சிவானந்தசுந்தரம், உதவி அரசாங்க அதிபர் வை. வேலும்மயிலும், வல்வை நகரசபைச் செயலாளர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோருட்பட பல பொது ஸ்தாபனப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

நினைவுத்தூபி மிக விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு நினைவு தினமான அக்டோபர் ஐந்தாம் திகதி திறந்து வைக்கப்படும். (ஒ-160)

## ஆலோசனை. .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசைகள் குழுக்களால் அடிக்கடி கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆகப் பிந்திய நாட்களில் பலரும் கருத்தொருமித்து மிக ஆணித்தரமாக அவற்றை வலியுறுத்தி வந்தனர்

அத்தகைய கருத்துக்கள், குழுக்கள் விரும்பியவாறு, உரிய மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுத் தகுந்தவாறு ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன, இதனைப் பிரசைகள் குழுக்களுக்கும் [illegible] உள்ளது. (அ)

## பத்திரிகையாளர் வேலை நிறுத்தம்

இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ளபத்திரிகைமான நஷ்டச் சட்டமூலத்தை ஆட்சேபித்து, இந்தியப் பத்திரிகையாளர் இன்று தேசிய அளவில் வேலை நிறுத்தம் செய்ய உள்ளனர்.

இதற்கிடையில் பிரஸ்தாப சட்ட மூலத்தை விவாதிப்பதை ராஜ்ய சபை நேற்று ஒத்திவைத்தது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06-09-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 6th September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org